# யாழ். அபிவிருத்திக்கு நிதிவழங்க அரசு மறுப்பு

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 14 இதழ் 75
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 26 — 04 — 1992

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு நிதி வழங்கமுடியாது என அரசு கைவிரித்துள்ளது.

வவுனியா, அம்பாறை மாவட்டங்களுக்கு இம்முறை கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் யாழ். மாவட்

[4ம் பக்கம் பார்க்க]

## புலிகள் தடை குறித்து அமைச்சரவை தீர்மானிக்கும்

[புதுடில்லி]
விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது குறித்து இந்திய மத்திய அமைச்சரவை விரைவில் கூடி தீர்மானிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் மே மாதம் ராஜீவ் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்யவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வந்

(4ம் பக்கம் பார்க்க)

## இன்று கொழும்பு செல்லும் பிக்குகள் மீண்டும் யாழ். வருவர்

(யாழ்ப்பாணம்)
இன்று கொழும்பு திரும்பவுள்ள பௌத்த பிக்குகள் மீண்டும் யாழ்ப்பாணம் வரலாம் என்று தெரியவருகிறது.

விடுதலைப்புலிகளுடன் இதுவரையும் இருதடவைகள் பேச்சுவார்த்தைநடத்திய குழுவினர் கொழும்பில் அரசுடன் பேச்சு நடத்திவிட்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்து புலிகளுடன் பேச்சு நடத்தலாம் என்று தெரியவருகிறது.

# முல்லைத்தீவில் புலிகளினால்

# 2 ராணுவ முகாம்கள் தாக்குதல்

# பல படையினர் உயிரிழப்பு

(கொழும்பு)
முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு இராணுவ முகாம்கள்மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் நடத்திய திடீர் அதிரடித் தாக்குதல்களில் பல இராணுவத்தினர் உயிரிழநததுடன் பலர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலின்போது புலிகள் தரப்பிரல் ஏற்பட்ட சேத விபரங்கள்பற்றி தெரிவிக்கப்படவில்லையாயினும் படையினரிடமிருந்து பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டதாக தெரியவருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்குதொடுவாய்க்கும் கொக்கிளாய்க்கும் இடையில் இருக்கும் இரண்டு இராணுவ முகாம்கள்மீது விடுதலைப் புலிகள் நேற்று தாக்குதல் நடத்தியதில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள் 4 இராணுவத்தினர் பலத்த காயமடைந்ததாகவும்

[4–ம் பக்கம் பார்க்க]

## ஆஜராகத் தயார் உடுகம்பொல அறிவிப்பு

[கொழும்பு]
அரசுக்கு எதிராக சத்தியக்கடதாசி மூலம் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக விசாரிப்தற்கு விசாரணைக் கமிஷன் வைத்தால் அதன் முன் ஆஜராகத் தான் தயார் என்று முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல, ராவய பத்திரிகைக்கு விசேட அறிக்கை மூலம் தெரிவித்ததாக தெரிவிக்கப்படுகிறது

அந்த அறிக்கையில்மேலும்

(4-ம் பக்கம் பார்க்க)

## மன்னார்-வவுனியா வீதியில் மீண்டும் தாக்குதல் முஸ்தீபு

(வவுனியா)
மன்னார்-வவுனியா வீதியில் மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள படையினர் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வவுனியா நகரப் பகுதியில் கடந்த சில நாட்களாகப் படையினர் அதிகளவில் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

மன்னார்-வவுனியா வீதியில் உள்ள நெலுக்குளம், செட்டிகுளம், பாவற்குளம் ஆகிய பகுதிகளிலும் பெருமளவில் படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

199?-ம் ஆண்டு ஜூன்முதல் இன்று வரை மன்னார்-வவுனியா வீதி வழியே முன்னேற

[4ம்பக்கம் பார்க்க]

## கொம்படியில் மேலும் இரு சகோதரர்கள் பலி

[யாழ்ப்பாணம்]
கொம்படியில் கடந்த வியாழக்கிழமை நிகழ்ந்த குண்டு வெடிப்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர் இருவர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆண்டு 10 இல் கல்வி கற்கும் மாணவர் தங்கராசா றஞ்சித்குமார், பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் உயர் தர வகுப்பில் கல்விகற்கும்

[4–ம் பக்கம் பார்க்க]

## பௌத்த பிக்குகள் குழு ஆஸ்பத்திரிவிஜயம்

[யாழ்ப்பாணம்]
பௌத்தபிக்குகள்குழுவினர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள நோயாளர்களையும் கட்டிட இடிபாடுகளையும் நேரில் பார்வையிட்டதுடன் அங்குள்ள குறைபாடுகளையும் கேட்டறிந்துகொண்டனர்.

முதலில் சிறுவர்கள் சிகிச்சை பகுதிக்கு சென்று நோயாளி

[4–ம் பக்கம் பார்க்க]

## வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்பிற்கு 7 கட்சிகள் யோசனை

[கொழும்பு]
இனப்பிரச்னைக்குத்தீர்வுகாண வேண்டுமானால் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கவேண்டுமென்று கொழும்பிலுள்ள ஏழு தமிழ்க் கட்சிகள்ஒருமனதாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் கேட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அப்பிரதேசத்திற்கு சுயமான ஆட்சி அதிகாரம் அவசியமென்றும் அத்துடன் தமிழரின் பிரதேசங்கள் என்று அடையாளம் காணப்பட்ட இடங்களில் சிங்களவர்களை அரசினால் குடியமர்த்தப்படுவது உடனயக நிறுத்த வேண்டுமென்றும் இரு யோசனைகளையும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் ஏழு தமிழ்கட்சிகளும் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கபடுகிறது.

(மா)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)
வவுனியா மாவட்டத்திலும் மன்னார் மாவட்டத்திலும் அமுலிலிருந்த ஊரடங்கு உத்தரவு நேற்று மாலை 6-00 மணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

[கே]

## குண்டுவெடிப்பு குறித்து விழிப்புடனிருக்க எச்சரிக்கை

[யாழ்ப்பாணம்]
அரசாங்கத்தினதும், தேச விரோதக் கும்பல்களினதும் ஒன்றிணைந்த மக்கள் விரோத நாசகாரச் செயல்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. பொற்கோ வேண்டுகோள் விடுத்துள்ளார்

கொம்படியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒரு திட்டமிட்ட செயலாகும். அரசாங்கத்தினதும், தேச விரோதக் கும்பல்களினதும் இதுபோன்ற செயல்கள் குறித்து பொதுமக்கள்விழிப்புடன் இருக்க வேண்டும்

விமானங்கள் இப்பகுதிகளில் முன்னர் வீசிய குண்டே நிலத்துக்கடியில் புதைந்து மறைந்து இருந்ததென்றும், இதில் தேனீர்க்கடை அடுப்பு இயங்கி வந்ததினாலேயே

(4-ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் காந்தி கொலை இறுதிக் குற்றப்பத்திரம்

[சென்னை]
ராஜீவ்காந்தி கொலை குறித்த இறுதி குற்றப் பத்திரம் அடுத்த மாத இறுதியில் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் என விசேட புலனாய்வுக் குழுத் தலைவர் திரு. வி. ஆர். கார்த்திகேயன் நீதியரசர் வர்மா விசாரணைக்குழுமுன் தெரிவித்துள்ளார்.

மேற்படி விசாரணை நடைபெற்றுவருவதாகவும் விரைவில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

[க]

## புலிகள் - பிக்குகள் குழு இரண்டாவது சந்திப்பு

[யாழ்ப்பாணம்]
பௌத்த குழுவினருக்கும் விடுதலைப்புலிகள் பிரமுகர்களுக்குமிடையில் நேற்று மாலை நடைபெற்ற 2வது கட்டப் பேச்சு வார்த்தைகள் சுமுகமான முறையில் நடைபெற்றன.

முதலாம் கட்டப்பேச்சுவார்த்தைகளின்போது, பௌத்த குழுவினரினால் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு, விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் நேற்று விளக்கம் அளித்தார்கள்.

விடுதலைப் புலிகள் மக்கள்

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வொண்டர்லயிட் டீவுடர் 550g—275g மற்றும் நுளம்புத் திரி மொத்த விற்பனைக்கு உண்டு. புஸ்பா & Co, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-2091)

A/L கடந்தகால வினுவிடை (உயர் கல்விப் பதிப்பக வெளியீடு) 1-5 வரை தமிழ், கணிதம், தம்பிராசா 7-ம் சமூகக் கல்வி - சந்திரசேகரம் 7-ம், 8-ம் சுகாதாரக் கல்வி செல்வநாயகம் பிரான்சிஸ் காரைக்கால் அம்மையார் புராணம். கானல்வரி (உ. வே. சாமிநாத ஐயர் உரை) ரமணிச்சந்திரன், லக்ஷ்மி நாவல்கள், பாலாஜி புத்தகசாலை, 27, மின்சார நிலைய வீதி, 15/5 முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [ஏ-2092]

### தேவை

பாலர் வகுப்பிலிருந்து A-L வரை தனியொருவருக்கோ சிறு குழுக்களிற்கோ தங்களால் இயன்ற பாடங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. மாலை 2.00—3.00ற்குள் நேரடியாகச் சந்திக்கவும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. சி-6212

### "மீரா பிரசுரங்கள்"

உயிரோட்டமான நாவல்கள் அக்கினி, முள்முடி மன்னர்கள், விடியலைத் தேடி, ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள். யாழ்ப்பாணம், சுன்னுகம், சாவகச்சேரி, நெல்லியடி, வல்வெட்டித்துறை புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. (சி-6200)

### வினு — விடை

உயர்தர விஞ்ஞான பாடங்களுக்கான கடந்தகால வினு—விடைகள் (Pass Papers), மாதிரி வினுத்தாள்கள் (Model Papers) விற்பனையில் உள்ளன. தொடர்பு: உயர்தர தராதரக் கல்வி நிலையம், ('A' Level Centre), 1-ம் ஒழுங்கை, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். [ஏ-2056]

### கல்வி

G. C. E. (O L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினுல் 40 மணித்தியாலத்திற்குள் கற்பிக்கப்படும். மற்றும் பாலர் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. [சி-6213]

### வைத்திய சேவை

பெண்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் ஆகியோருக்கும் முறிவு, நெரிவு, சதைநெரிவு, கண்டல் முதலிய சகலவித ரோகங்கட்கும் நிவாரணம் பெற நாடுங்கள். அமுதா வைத்திய நிலையம், டாக்டர் திருமதி அ. ஸ்ரீபதி D. A. M. [Cey] [சமாதான நீதவான்], 15, இராசாவின் தோட்டம் ஒழுங்கை, [குயின்பத்மாவீதி], யாழ்ப்பாணம், [சி-6189]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### தவறிவிட்டது

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த பரமேஸ்வரன் பகீரதன் [730320523 V] என்பவரது அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர் ஆ பரமேஸ்வரன் பகீரதன், பிள்ளையார் கோவிலடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய் என்ற விலாசத்திற்கு ஒப்படைக்கவும். [சி 6216]

## இன்று

[யாழ்ப்பாணம்]

இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்தில் திருப்திகரமான தபால் சேவை நடாத்துவது சம்பந்தமாக உத்தியோகத்தர்கள், உப அஞ்சல் அதிபர்கள், ஊழியர்கள், பதிலாட்கள் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

ஃ ஃ ஃ

[வேலணை]

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி [பிரதேசசபை] மன்றங்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சகல சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்துக் கலவையாளர்களினது கூட்டமொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை9-30மணிக்கு யாழ்,மாநகரசபை சித்தஆயுர்வேத வைத்தியசாலையில் சங்கத் தலைவர் திரு. வ பத்மநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. [75]

ஃ ஃ ஃ

[யாழ்ப்பாணம்]

''வள்ளுவர் வழியில் வீரம், மானம்'' என்ற நூல் வெளியீட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

திரு. க. சொக்கலிங்கம் தலைமையில்நடைபெறும் இவ்விழாவில் வெளியீட்டுரையை விடுதலைப்புலிகள்கலைபண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும், நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி, செயலதிபர் யோகியோகரத்தினம், செல்வி சுதாமதி, க. திருநாவுக்கரசு, பண்டிதர்பரந்தாமன் ஆகியோர் கருத்துரைகளும் வழங்குவார்கள்.

## இராசி பலன்

**26/04/1992**

**ஞாயி றுக்கிழமை**

**(தமிழுக்கு சித்திரை 14)**

நவமி மாலை 6-47 வரை; அவிட்டம் முழுவதும்; மரண யோகம், இராகுகாலம் மாலை 4-29 முதல் 5-59 வரை சுப நேரம் காலை 8-59 முதல் 10-29 வரை.

மேஷம்:- அன்னையின் ஆலோசனை, தொழில் ஆதாயம், புகழ்.

இடபம்: மனச்சங்கடம், உறவினர் கடும்சொல், தவிப்பு.

மிதுனம்: மனைவி துன்பம் கருத்துவேறுபாடு, அலைச்சல்.

கடகம்: திருமணப்பேச்சு, மனச்சந்தோஷம். தொழில் சிறப்பு.

சிங்கம்: தயாளகுணம் மன்னிக்கும் சுபாவம் உறவினர் உதவி

கன்னி: பிறர் தலையீடு, குடும்பபொறுப்பு, அளவற்ற துன்பம்.

துலாம்: கொள்கைமுரண்பாடு சகோதரர் விரயம், கண்வலி.

விருச்சிகம்: பெற்ருேர் பாசம், தொழில் வாய்ப்பு, காரியசித்தி.

தனுசு; தொழில் நஷ்டம், அதிகசிரமம், சாமத்திய குறைவு.

மகரம்: தொழில் முறைப் பயணம் நண்பர் உதவி, வாழ்க்கைச்சுகம்.

கும்பம்: கடன் நெருக்கடி, அபகீர்த்தி, அவசரகோலம்

மீனம்: போஜனசுகம், கடினஉழைப்பு, பாபகாரியம்.

— ஜோஸ்யர்.

# தமிழக அரசின் முடிவிற்கு இடைக்கால தடைஉத்தரவு

(சென்னை)

'இலஸ்ரேட்டட் வீக்லி ஒவ் இந்தியா' சஞ்சிகையின் முன்னுள் சென்னை நிருபர் கே, பி. சுனில், சபை உரிமையை மீறினுர் எனக் கூறி தமிழ்நாடு சபாநாயகர் அனுப்பிவைத்துள்ள கைது வாரண்ட் உத்தரவுக்கு சுப்ரீம் கோர்ட்டின் 3 நீதிபதிகள் அடங்கிய குழு இடைக்காலத் தடை உத்தரவு விதித்துள்ளது.

மேற்படி நிருபர் கே. பி. சுனில் சமர்ப்பித்த மனு குறித்துத் தமிழ்நாடுஅரசு, சென்னை நகரப் பொலிஸ் கமிஷனர் மற்றும் சட்டப் பேரவைச் செயலருக்கு நோட்டீசை இந்த நீதிபதிகள் குழு அனுப்பியுள்ளது.

## பிரித்தானிய இளவரசி விவாகரத்து

[லண்டன்]

பிரித்தானிய எலிசபெத் மகாராணியின் மகளான ஆன் இளவரசி தமது கணவராகிய கப்டன் மார்க் பிலிப்ஸை உத்தியோகபூர்வமாக நேற்று விவாகரத்து செய்துள்ளார்.

கடந்த ஒன்றரை வருடங்களாக இவர்கள் இருவரும் பிரிந்து இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## டிக்ஷிற் வருகிறா

[கொழும்பு]

இந்திய வெளியுறவுச்செயலர் ஜே. என் டிக்ஸிற் நாளை திங்கள்கொழும்புவரவுள்ளார்.

கொழும்பில் நடைபெறவிருக்கும் 'சார்க், அமைப்பின் வெளியுறவுச் செயலர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளுமுகமாக இவர் கொழும்பு வரவுள்ளதாகவும் சார்க் அமைப்பின் ஏனைய நாட்டுப் பிரதிநிதிகளும் இங்கு வரவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [க]


ஜாம் போத்தல் மூடி Sealer

Omnia Jam Bottle Sealer

**தேவை**

பாவித்த அல்லது புதிய Omnia Sealer தேவை. விலை விபரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.


**TasteLine Industries(Pvt)Ltd**

No. 14, Seenier Lane, Jaffna. (ஏ-2097)


உ

சிவமயம்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் டாக்டர்**

**கார்த்திகேசு சயலொளிபவன்**

(உரிமையாளர் வண்ணுர்பண்ணை சிவன் கிளினிக்)

| தோற்றம் | திதி | மறைவு |
|---|---|---|
| 12 07-1924 | 27 04 1992 | 09-05-1991 |

நெஞ்சகம் நினைவே கூர
நிறைமகா குணங்கள் யாவும்
கொஞ்சிடும் மனிதப் பண்பு
குலாவிய அன்புக் கோலம்
மஞ்சுபோல் நினைந்து வாழ்ந்த
மாமணி நீங்கள் ஐயா
அஞ்சலி செய்கின்ருேம் யாம்
அமரவாழ்வுற்றீர் சாந்தி

27-04-92 திங்கள் [நாளை] மாலை 4-30 மணிக்கு யாழ். வண். மேற்கு ஞான வைரவர் ஆலயத்தில் ஆத்ம சாந்திப் பூசை நடைபெறவுள்ளது.

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர், மைத்துனர், உறவினர்.

27/40 புங்கங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். (சி-6210)

# ஓராண்டு நினைவஞ்சலி



**சதாசிவம் விமலாதேவி**

மலர்வு: 15-05-1953 உதிர்வு: 08-05-1991

ஓராண்டல்ல ஓராயிரம்
ஆண்டுகள் சென்ருலும் —
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை
விட்டு நீங்காது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
கணவன், பிள்ளைகள், சகோதரர், உறவினர்.

இல. 40, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (சி-6214)

# "யாழ். மாநகரசபைப் பகுதியில் ——
# 60வீதமானகுழந்தைகள்90 வீதமானபெண்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்"

## - வைத்திய கலாநிதி தெய்வேந்திரம்

(யாழ்ப்பாணம்)

"யாழ். மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் அகதிமுகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு, போஷாக்குக் குறைவினால் நோய்கள்ஏற்படஇடமுண்டு" இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலை மருந்துக் களஞ்சியத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் வைத்திய கலாநிதி தெய்வேந்திரம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: மாநகரசபை அகதிகள் முகாம்களில் குழந்தைகளில் 60 வீதமானோருக்கும், தாய்மாரில் 90 வீதமானோருக்கும் போஷாக்குக் குறைவாக உள்ளதென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

12 அகதி முகாம்களில் மேற்கொண்ட ஆய்வுகளின்படி ஒரு வயதுக் குழந்தைகள், எதிர்பார்த்த நிறையிலும் பார்க்க குறைவானவர்களாக இருந்தனர்.

108 குழந்தைகளில் 41 வீதமான குழந்தைகள், எதிர்பார்த்த நிறை குறைந்ததோடு, 60வீதமான குழந்தைகள் போஷாக்குச் சத்துணவு குறைவாக உள்ளனர்.

ஒன்று தொடக்கம் இரண்டு வயதான குழந்தைகளை நிறுத்துப் பார்த்தபோது, 70 பிள்ளைகள் உள்ள நிறையிலும் பார்க்கக் குறைவாக இருந்தனர். அது 80 வீதமாகும்.

2 வயது தொடக்கம் 5வயது வரை உள்ள குழந்தைகளில் 539 பிள்ளைகளில் 390 குழந்தைகள் நிறை குறைவாக இருந்தனர். இது 74 வீதமாகும்.

138 கர்ப்பிணித் தாய்மாரில் 137 பேர் நிறை குறைவாக இருந்தனர், 50 வீதமானோருக்குப் போஷாக்குச் சத்துணவு குறைவாக இருந்தது.

பொதுவாக மாநகரசபைப் பகுதியில் நாம் மேற்கொண்ட ஆய்வுகளின்படி, 60 வீதமான குழந்தைகளும், தாய்மாரில் 90 வீதமானோரும் போஷாக்குச் சத்துணவுக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாலூட்டும் தாய்மாரில் 103 பேருக்கு இரத்தசோகை, உயிர்ச்சத்துக் குறைவு காணப்பட்டது.

அகில இலங்கை ரீதியாக மேற்கொண்ட ஆய்வுகளின்படி, 1976ம் ஆண்டு சடுதிப் போஷாக்கு உணவுக் குறைவு 2.1 வீதமும், நீண்டகாலப் போஷாக்குச் சத்துணவுக் குறைவு யாழ். மாவட்டத்தில் 28.4 வீதமாகவும் குறைந்திருந்தது.

1979 தொடக்கம் 1982 வரை அதே சடுதி போஷாக்குணவுக் குறைவு 5.6 வீதமாகவும், நீண்டகாலப் பாதிப்பு 24.7 வீதமாகவும் இருந்தது.

1992ம் ஆண்டு சடுதி போஷாக்கு உணவுக் குறைவு 5.6 வீதமாகவும், நீண்டகாலப் போஷாக்குக் குறைவு 60 வீதம் வரை உயர்ந்துள்ளது.

முக்கியமாக, இளம் வயதில் போஷாக்கு உணவுக் குறைவினால் உள வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. மூளை வளர்ச்சி 5 வயதுக்குள் நடைபெறுகின்றது. மனிதர் ஒருவரது தலைச் சுற்றளவு 36 சென்ரி மீற்றர் அளவு கொண்டது. ஒரு வயதில் 12 சென்ரி மீற்றர் அளவில் தலைச்சுற்று வளர்கிறது. இதில் ஒன்று தொடக்கம் மூன்று மாதம் வரை 6 சென்ரி மீற்றரும், அடுத்த மூன்று மாதத்தில் 3 சென்ரிமீற்றரும், அடுத்த ஆறு மாதத்தில் 3 சென்ரி மீற்றரும் வளர்கிறது. இந்தக் காலங்களில் குழந்தையின் மூளை வளர்ச்சிக்குத் தாய்ப் பால் அவசியமாகின்றது.

ஆகவே, ஒருவரின் உள வளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் முக்கியமாகப் போஷாக்கு உணவு தேவைப்படுகின்றது. ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 2,000கலோரி சத்துணவு தேவை. கர்ப்பிணித் தாய்மாரைப் பொறுத்தமட்டில் 2,600கலோரி உணவு தேவைப்படுகிறது. (சு)

## கொம்பியூட்டர் நிறுவன கடத்தல் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பில் கொம்பியூட்டர் நிறுவனமொன்று பல லட்சரூபா பெறுமதியான தங்கக்கடத்தலில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த கம்பனிக்கு சிங்கப்பூரிலிருந்துவந்த இரு பொதிகளில் 40 லட்சம்ரூபா பெறுமதியான 70 தங்கப் பாளங்களும் பல கைக்கடிகாரங்களும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதற்கு முன்னரும் இந்தக் கம்பெனிக்குவந்தபொதிகளில் பல லட்சரூபா பெறுமதியான தங்கப்பாளங்கள் கண்டு எடுக்கப்பட்டு இருவர் கைதாகியுள்ளனர்.

இந்த மோசடி பலகாலமாக நடந்துவந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## முத்தமிழ் விழா இன்றைய நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

யாழ்.ஆயர் வண.தியோகுப்பிள்ளை ஆண்டகையை கௌரவிக்கும் முத்தமிழ் விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 5 மணிக்கு யாழ், பிரதான வீதியிலுள்ள திருமறைக் கலாமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்ச்சிகள் யாழ் அரச அதிபர் திரு கே. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும். சிறப்புரைகளும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும் இன்றுஆண்டகை தியோகுப்பிள்ளை கௌரவிக்கப்படுவார்.

## பருத்தித்துறை துறைமுகத்தை மூட அரசு ஆலோசிக்கிறது?

(கொழும்பு)

பருத்தித்துறைத் துறைமுகத்தை மூடிவிட்டு காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்திசெய்வதற்கு அரசு ஆலோசித்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு உணவுப் பொருட்களுடன் வரும் கப்பல்களைத் தற்போது தாமதப்படுத்தி அனுப்புவதுடன், பொருட்களின் எண்ணிக்கையும் குறைத்து வருகின்றதாம்.

இராணுவ அதிகாரிகளின் விருப்பப்படி, காங்கேசன் துறைத் துறைமுகத்தைப் படிப்படியாக அபிவிருத்தி செய்வதுடன், காங்கேசன் துறைத் துறைமுகம் ஊடாகவே, பொருட்களை யாழ். நகருக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. [வி]

## அளவை, நிறுவை கருவிகளுக்கு முத்திரையிட ஏற்பாடு

[கொழும்புத்துறை]

சங்கானைப்பகுதிப் பாவனையாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் உதவும் முகமாக யாழ். செயலக நிறுவை, அளவைகள் திணைக்களம் சங்கானைப்பகுதி வர்த்தகர்களின் தராசுகள், அளவைகள் நிறுவைகள் கருவிகளுக்கு 27-ம், 23-ம் திகதிகளும் 30-ம் திகதியும் மூன்று தினங்கள் முத்திரையிடவுள்ளது.

குறித்த திகதிகளில் இப்பகுதிச் சகல வர்த்தகர்களும் சங்கானைப் பிரதேச செயலகத்திற்குத் தத்தமது அளவைகள், நிறுவைகள் தராசு படிகளுடன் சமூகமளிக்க வேண்டுமென்றும் காலை 8-30 மணி முதல் பிற்பகல் ஒருமணி வரை முத்திரையிடும் வேலைகள் நடைபெறுமென்றும் யாழ். செயலக நிறுவை அளவைத் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார். (154)

## தபால் சேவைகள் பன்முகப்படுத்தப்படும்

(கொழும்பு)

மே மாதம் முதலாம் திகதி முதல் தபால் சேவைகள் மாகாண ரீதியில் பன்முகப்படுத்தப்படவிருக்கிறது.

இதன்படி ஒன்பது மாகாணங்களுக்கும் ஒன்பது மாகாண பிரதித் தபால் மா அதிபர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். இவர்களின்கீழ் சிரேஷ்ட நிர்வாக பணிப்பாளர், தபால் சுப்பிரிண்டடன் ஆகியோரும் நியமிக்கப்படுவர்.

## தமிழீழ கலைஞர் பங்குபற்றும் மாபெரும் தமிழிசை விழா

(யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் மிகப் பிரமாண்டமான அளவில் தமிழீழத்தின் நூற்றுக்கணக்கான இசைக்கலைஞர்களை ஒன்றிணைத்து மாபெரும் தமிழிசை விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதியில் மே மாதம் 2-ம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 6-ம் திகதி புதன்கிழமை வரையிலான ஐந்து நாட்கள் இவ்விழா நடைபெறும். தினமும் மாலை 5-00 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இசைக்கலைஞர்கள், இசைத்துறை அறிஞர்கள் எனப் பலர் பங்குபற்றும் இவ்விழாவில் புகழ்வாய்ந்த பதினுறு பாடகர்கள் பாடுகிறார்கள். இப்பாடகர்களுக்கு அணி செய்வாத்தியக் கலைஞர்களாக நாற்பது கலைஞர்கள் பங்கேற்கின்றார்கள். தலைசிறந்த நாதஸ்வரக் கச்சேரிகளுடன் வயலினிசைக் கச்சேரிகள் கெஞ்சிற் கச்சேரிகள் என்பனவும் இடம்பெறுகின்றன.

தமிழீழத்தின் சிறப்பு மிக்க இசை விற்பன்னர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இவ்விழாவை அணிசெய்கிறார்கள். இசைத்துறை சார்ந்த அறிஞர்கள், இத்தமிழிசை விழா அரங்கில் கலந்து கொண்டு இசை பற்றிக் கருத்துரையாற்றுவார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்கள்.

நீண்ட காலத்திற்குப் பின் மிகப் பிரமாண்டமான தமிழிசை விழாவாக இவ்விழா அமைகின்றது. மண்ணின் மீதும், போராட்டத்தின் மீதும் பற்றுக் கொள்ளவைக்கும் தமிழிசை விழாவாகவும், தமிழுக்கும் இசைக்கும் ஒரு பெருவிழாவாகவும் இது அமையப்பெறும். இசை இன்பம் பெற்றிடவும், விழாவைக் கண்டு இன்புறவும் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கூடும் மக்களின் வசதி கருதி அதற்கான ஏற்பாடுகள் முன்கூட்டியே நடைபெறுகின்றன. 'அனைவரும் திரண்டு வருக' என விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் அழைப்புவிட்டிருக்கின்றது.

## இலங்கைத் தமிழர் இருவர் திருச்சியில் கைது

(சென்னை)

ஒரு பெண் உட்பட விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்தோர் என சந்தேகிக்கப்படும் இருவர் கடந்த வியாழக்கிழமை திருச்சி விமான நிலையத்தில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து ஏயர் லங்கா விமானம் மூலம் இவர்கள் திருச்சிக்கு வந்துள்ளதாகவும் இவர்கள் வசம் உள்ள பாஸ் போட்டுகள் போலியானவை எனவும் மற்றும் ஏனைய ஆவணங்களும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறிப்பிடப்பட்ட ஆண் விசாரணைக்காக சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## மென்பந்துக் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்)

ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் யங் லயன்ஸ் விளையாட்டுக்கழகம் திருமணமானவர்களுக்கும், இளைஞர்களுக்குமிடையில் நடாத்திய 30 ஓவர் மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் இளைஞர் அணி 7 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இளைஞர் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 26 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றது. தேவா, ஜெயராசா முறையே 3, 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்கள்.

திருமணமானவர்கள் அணி 25 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது.

0 0

ஈச்சமோட்டை சனசமூக நிலைய அங்கத்தவர்களிடையே நடைபெற்ற 20 ஓவர்கள் மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் இளைஞர் அணி 16 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இளைஞர் அணி 19 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களைப்பெற்றது.

திருமணமானவர்கள் அணி 20ஓவர்களில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 93 ஓட்டங்களைப் பெற்றது. கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம், எஸ். ஜேசுதாசன் ஆகியோர் முறையே 25, 22 ஓட்டங்களைப்பெற்றனர். [வி)

## கிராம அலுவலர்களுக்கு புதிய சம்பளதிட்டம்

[கொழும்பு)

கிராம அலுவலர்களுக்கு ஒரு புதிய சம்பள திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இதன்படி முதலாம், இரண்டாம் தரங்களுக்கு மேலதிகமாக அதி உயர் தரம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளதாகவும் இதற்கான ஆலோசனைகள் பொது நிர்வாக அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

# தீவுப்பகுதிராணுவமுகாம்களை அகற்றுமாறு கோரி மகஜர்

## பௌத்த குழுவிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களை உடன டியாக அகற்றி இடம்பெயர்ந் துள்ள மக்களை மீளவும் சொந்த இடங்களில் குடியேறி இயல்பு வாழ்க்கை வாழவழி செய்தல் வேண்டும் என்று இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம், பௌத்த குழுவினரிடம் கையளித்த மகஜரில் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

நேற்று முன்தினம் இரவு பௌத்த குழுவனரைச் சந் தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியமேற்படி கழகப் பிரதி நிதிகள் தீவக மக்களின் குறைபாடுகள் அடங்கிய மகஜ ரொன்றை ஜனாதிபதியிடம் கையளிக்குமாறு கொடுத்த துடன் தீவக மக்கள் எதிர் நோக்கும் பிரச்னைகள் குறித் தும் விரிவாக எடுத்துக் கூறி னுர்கள்.

அம்மகஜரில் மேலும் விக்கப்பட்டுள்ளதாவது:இடம் பெயர்ந்த மக்களினது தொழி லின்மை, அடிப்படை வசதி யின்மை ஆகியவற்றை கருத் தில்கொண்டு புனர்வாழ்வு நட வடிக்கைக்கு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்தல் வேண் டும். இடம்பெயர்ந்துள்ள எமது மக்களின் அடிப்படைத்தேவை களான கல்வி, சுகாதார,மருத் துவ வசதி, உணவு, உடை, குடியிருப்பு வசதிகளை உடனடி யாக ஏற்படுத்தித்தரல் வேண் டும் போன்றவை உட்பட பல கோரிக்கைகள் இம்மகஜ ரில் வலியுறுத்தப்பட்டுள்ளது. [ரி]

# வவுனியாவில் இடி விழுந்து தாயும் மகளும் பலி


(வவுனியா)

வவுனியாவில் மழை பெய்து கொண்டிருந்த போது இடி விழுந்ததில் தாயும், மகளும் கருகிப் பலியான பரிதாபச் சம் பவம் ஒன்று கடந்த 23-ம் திகதி இடம் பெற்றுள்ளது.

வவுனியா கணேசபுரம் என்ற இடத்தில் நடந்த இச் சம்பவத்தில், பலியானவர்கள் வீட்டில் இருந்தபோதே இடி விழுந்ததாகவும் இதனல் வைத்திலிங்கம் மீனட்சி (48- வயது), வைத்திலிங்கம் நிர் மலா (வயது-21) என்ற தாயும், மகளும் கருகிப் பலி யாகினராம்.

இவர்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து இப்பகுதியில் தங்கி யிருந்தபோதே இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றுள்ளது. (சி)

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தையா சிவஞானம்

[கணக்காளர் பகுதி, இ. போ. ச. கோண்டாவில்]

| தோற்றம்: | மறைவு: | திதி: |
|---|---|---|
| 1-3-1948 | 26-4-1990 | 26-4-1992 |

ஆண்டு இரண்டு சென்றதையா
ஆறவில்லை நம் துயரம்
காலன் வந்துன்னை
காற்றாய் மறைத்திட்டான்
கனவிலும் நினைவிலும் உன்
களங்கமற்ற முகம் தோன்றுதையா
தனிமையில் நிற்கின்றோம்
தவிக்கின்றோம் உன் நினைவால்
ஞானத்தின் ஞாலம் சிவஞானமே
ஆறுதல் அடைவது உன் நிழற்படம் கண்டு

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

குடும்பத்தினர், நண்பர்கள்.

ஏழாலை மேற்கு, ஏழாலை. (எ-2101)

# தந்தை செல்வா நினைவுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் பதி னைந்தாவது சிரார்த்த தினம் இன்றாகும். அன்னாரை நினைவு கூரும் வகையில் இன்றுகாலை பொதுமக்கள் தந்தை செல்வா நினைவாலயத்தில் மலரஞ்சலி செலுத்தி நினைவு கூருவார்கள். மாலை நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் நினைவஞ்சலிக் கூட்டம் நடை பெறும்.ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ். கணபதிப்பிள்ளை தலைமை யில் நடைபெறும் இக்கூட்டத் தில் திரு. க சொக்கலிங்கம் இளம்புலவனர், ஜோஸ்பர் ஆகியோர் உரையாற்றுவ துடன், கவிநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (எஸ்-56)

# விமான மூலம் அகதிகள் வருவர்

(கொழும்பு)

126 இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவிலிருந்து அடுத்த வாரம் விமானம் மூலம் திருமலை வரவுள்ள னர்.

நாளை 27-ந் திகதியிலிருந்து மேற்படி அகதிகள் மூன்று தொகுதிகளாக விமானம் மூலம் அழைத்துவரப்படுவர் என புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கிரிஸ்டி சில்வா தெரிவித்துள்ளார். [க]

### புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தது.

மேற்படி இயக்கத்தை இந் தியாவில் தடை செய்வது குறித்து இரு வேறுபட்ட அபிப்பிராயங்கள் உயர் அதி காரிகள படடதல நிலவி வந்தது தெரிந்ததே. (க)

### யாழ்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தின் இவ்வருடத்துக்கான வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லையென யாழ். செயலகத்திலிருந்து கடந்த வாரம் கொழும்பு சென்ற அதி காரி ஒருவருக்கு புனர்வாழ்வு. புனரமைப்பு அமைச்சு தெரி வித்துள்ளது.

யாழ் மாவட்டத்தின் இவ் வருட வேலைத்திட்டங்களுக்கு 137 மில்லியன் ரூபா தேவை யெனச் செயலகத்தால் தயா ரிக்கப்பட்டு வடக்கு-கிழக்கு மாகாண சபைக்குக் கடந்த மாதம் அனுப்பப்பட்ட மேற் படி நிதியைப் பெறுவதற் காக திருமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குச்சம்பந்தப் பட்ட அதிகாரிசென்றபோது, மத்திய அரசு போதிய நிதி தமக்கு இம்முறை வழங்க வில்லையென்றும் இது பற்றி கொழும்புக்குச் சென்று கேட் கும்படி கூறப்பட்டதாம்.

யாழ். செயலக அதிகாரி கொழும்புக்குச் சென்று சம் பந்தப்பட்ட அமைச்சிடம் வினவியபோது நிதி வழங்க முடியாது எனக் கூறப்பட்ட தாம்.

91-ம் ஆண்டு யாழ். மாவட் டத்தில் முற்றுப்பெற்றவேலைத் திட்டங்களுக்கு இன்னும் வழங்கப்படவேண்டிய 18 மில் லியன் ரூபாவையாகிலும் தரும்படி கேட்கப்பட்டபோதி லும், அப்பணத்தையும் தற் போதைய நிலையில் வழங்க முடியாது எனத் தெரிவிக்கப் பட்டது. (வி)

### முல்லைத்தீவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மோதல்கள் ஐந்து மணித்தியாலங்கள் இடம் பெற்றதாகவும் தரைப்படை, விமானப்படை, பீரங்கிப் படை ஆகியவற்றின் உதவியு டன் இராணுவத்தினர் விடு தலைப் புலிகள்மீது எதிர்த்தாக் குதல்கள் நடாத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து மைல் இடைவெளியி லுள்ள இரண்டு இராணுவ முகாம்களையும் விடுதலைப்புலி கள் சுற்றிவளைத்து தாக்கிய தாகவும் கூறப்படுகிறது. [மா]

### பௌத்த பிக்குகள

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களையும் அதன் பின்னர் ஏனைய விடுதிகளுக்கு சென்று நோயா ளர்களைப் பார்வையிட்டனர்.

குறிப்பாக இராணுவ நட வடிக்கையின்போது விமானம் ஷெல் துப்பாக்கி சூட்டிற்கிலக் காகி அங்க உறுப்புகள் இழந்த நோயாளிகளை மிக உன்னிப் பாக பார்வையிட்டனர்.

விமான தாக்குதலுக்குள் ளாகி முற்றாக பாதிக்கப்பட்ட வைத்தியர்கள் விடுதி, மாந் துக்களஞ்சியப் பகுதி ஆகிய வற்றைப் பார்வையிட்டனர்.

பௌத்த பிக்குகள் குழு யாழ். போதனைவைத்தியசாலை யில் விடுதிகளைப் பார்வை யிட்டுக் கொண்டிருந்தபோது இந்து, கிறிஸ்தவ தெய்வப் படங்களோடு மாட்டப்பட்டிருந்த புத்தர் பெருமானின் படத்தையும் கண்டு மகிழ்ந்தனர்.

1987ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ம் திகதி கடமையி லீடுபட்டிருந்த சமயம் இந்திய இராணுவத்தினரின் துப்பாக் கிச் சூட்டிற்குப் பலியானயான 21 ஊழியர்களின் திருவுருவப் படங்களையும், விமானத் தாக் குதலால் பாதிக்கப்பட்டிருந்த இடிபாடுகளையும் வீடியோ கமரா மூலம் படம்பிடித்துக் கொண்டனர். [56]

### குண்டு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

குண்டு சூடேறி வெடித்து பெரும் உயிர்ச்சேதத்தை ஏற் படுத்திவிட்டது என தேச விரோதக் கும்பல்கள் பிரச் சாரம் செய்து உண்மை நிலையை திசை திருப்பி வரு கின்றது

குண்டுவெடிப்பின் போது சேதமடைந்த தேனீர்க்கடை யின் கூடுப்பு சேதமடையாது அப்படியே இருக்கின்றது. இக் கடையினுள் இருந்த ஒரு மேசைக்கடியில் வைக்கப் பட்ட குண்டே வெடித்து உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி யுள்ளது.

பொதுமக்கள் மத்தியில் சந் தேகத்துக்கிடமாக நடமாடும் அந்நியர்கள் பற்றியும், அனு தரவாக பொது இடங்களில் இருக்கும் பார்சல்கள் பற்றி யும் உடன் விடுதலைப்புலிகளு க்கு தெரிவிக்கும்படி திரு. பொற்கோ மேலும் கேட்டுக் கொண்டார். (வி)

### இன்று

[யாழ்ப்பாணம்]

அஞ்சல் தொலைத்தொடர்பு இளைப்பாறிய சேவையாளர் நலன்புரிக்கழகத்தின் வருடாந் தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரியகுளம் சந்தியிலுள்ள யாழ்ப்பாணம் மாநகரசபை சனசமூக நிலைய சமாச மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள் ளது,

### ஆஜராகத் தயார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுவதாவது;-

1988 டிசம்பர் ஜனுதிபதி தேர்தலின்போது நடை பெற்ற விபரீத நிகழ்வு சம் பந்தமாக விடரங்களை இந்த நாட்டின் பொதுமக்கள் யாவ ரும் அறியவேண்டிய உரிமை உண்டு. தான் மறைந்து வாழ் வதன் முக்கிய காரணம் மேற் படி சம்பவங்களின் முக்கிய சாட்சி நானே. உண்மைகளை வெளிக்கொணரும் முயற்சி களில் ஈடுபட்டிருப்பதனுல் உயி ராபத்து இருப்பதனை காரணமாக மறைந்து வாழ வேண்டிய நிலையில் இருக்கி றேன்.

மேற்படி காலங்களில் இடம் பெற்ற சம்பவங்கள் பற்றிச் சகல விடயங்களையும் வெகு விரைவில் கடிதம் மூலம் வெளிக் கொணரவிருக்கிறேன என்று தெரிவித்தார். [மா]

### புலிகள் பிக்குகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணித்தலைவர் திரு கோ. மகேந்திரராசா, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், செயலாளர்நாய கம் யோகரட்ணம் யோகி, மகளிர் பிரிவு பொறுப்பாளர் ஜெயா, திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் உட் பட பல முன்னணிப் பிரமு கர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்கள். (வி)

### கொம்படியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவரது சகோதரர் தங்க ராசா சசிக்குமார் ஆகிய இரு வருமே மேற்படி குண்டுவெடிப் பில் கொல்லப்பட்டவர்களா வர்.

இச்சம்பவத்தில் இவர்களின் தந்தை எஸ். தங்கராசா, கண்ணில் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலை யில் சிகிச்சைபெற்று வருகின் றார். (வி)

### மன்னார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் முயன்று டாரிய இராணுவ நடவடிக் கைகளை மேற்கொண்டனர்.

வன்னி விக்கிரம, கறுப்பு நரி, வன்னி விக்கிரம 3 ஆகிய நடவடிக்கைகளை மேற் கொண்டபோதிலும் இராணு வத்தினால் மேற்படி பாதை களின் ஊடாக முன்னேற முடியாமல், விடுதலைப் புலி களால் தடுக்கப்பட்டதுடன் பல இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன் சில இராணுவ கவச வண்டிகளும் தகர்த்தெறியப்பட்டன- [வி]

## மரண அறிவித்தல்

### மேரி சுவாம்பிள்ளை [செல்லம்]

கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சில் லாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான மேரி சுவாம்பிள்ளை [செல்லம்] காலமானார். அன்னார் காலஞ் சென்ற சுவாம்பிள்ளையின் அருமை மனைவியும், காலஞ் சென்ற சேவியர் சுவாம்பிள்ளை [இ. போ. ச] விக டர் சுவாம்பிள்ளை, பேர்ளி நவரட்ணம், கிங்ஸ்லி யோசப், பேசி இம்மனுவல் ஆகியோரின் அருமைத் தாயாரும், பப்பா, ஜெகஜோதி, ருஜேஸ், றஞ்சி ஆகி யோரின் மாமியும், காலஞ்சென்ற றேமன், செல்வரட் ணம் (இ. போ. ச.) தின் சிறிய தாயாரும், சில்லாலை திருமதி புஸ்பம் செல்வரெட்ணத்தின் மாமியுமாவார். அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று ஞாயிறு [26-4-92] பிற்பகல் 3 30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் சில்லாலை புனித மரியாள் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

புஸ்பம் செல்வரெட்ணம்

''றெஜேக்கர் வாசா''
சில்லாலை. (சி 6215)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக் கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81